Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 20

## சீறாப்புராணத்தில் விலங்குகளின் இறையுணர்வு

*முனைவர் செ. சிராஜுதீன்*
*தமிழ்த்துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு),*
*மு.சா.ச. வக்பு வாரியக் கல்லூரி*
*மதுரை- 20*

உலகில்எத்தனையோ மொழிகள் பேசப்பட்டு வருகின்றன.இதில் பல மொழிகளுக்கு எழுத்து வடிவங்கள் இல்லை என்பதால் பயன்பாட்டுக்குக் கொண்டு வர முடியாமல் உள்ளன.ஆனால் சில மொழிகள் மிகப் பழமையானதாகவும், இலக்கியத்தில் சிறந்து விளங்குவதாகவும் உள்ளன.மொழியின் சிறப்பிற்கும் செம்மைக்கும் முதல் அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்கள்தான்.ஒரு மொழியின் சிறப்பு அந்த மொழியில் படைக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வழியாகத்தான் அறிய முடிகிறது.

இன்று உலகில் செம்மொழிகளாகக் கருதப்படும் பல மொழிகளில்திராவிட மொழியாகிய தமிழ்மொழிக்குத் தன்னேரில்லாச் சிறப்புக்கள் பல உண்டு.அவற்றின் ஒன்று, உலகளாவிய சமயங்கள் பலவற்றின் அடிப்படையில் அமைந்த பெருங்காப்பியங்களை, அது பெற்றிருப்பதாகும்.உலகச் சமயங்கள் பலவற்றின் மூல இலக்கியங்களைப் பெற்றிருப்பது தமிழ்மொழியின் தனிச்சிறப்பாகும்.பிற மொழிகளுக்கு இத்தகைய சிறப்பு வாய்த்திடாது. சமணச்சிந்தாமணி, பௌத்த மணிமேகலை, சைவசமயப் பெரியபுராணம், வைணவ கம்பராமாயணம், கிறித்துவ தேம்பாவணி, இஸ்லாமியச் சீறாப்புராணம் முதலியன தமிழன்னையின்.

## பொன்மேனியைப் பொலிவுறச் செய்யும் அணிகலன்கள் எனலாம்

தமிழ்மொழியில் பக்தி இலக்கியங்களைப் பொருத்தவரை இறைவனின் வழிக்கு மக்களை அழைத்துச் செல்லும் இறைத்தூதுவர்களைக் கதைத்தலைவர்களாக முன்வைத்துப் பாடும்பொழுது, பக்திச்சுவையைக் கூட்ட இயற்கையை மீறிய செயல்கள் காப்பியங்களில் பயன்படுத்தப்படும் நிலைகள் காணப்படுகிறது. இலக்கியச்சுவைக்காக, பிற மதத்தினரைச் சென்றடையும் விதமாக இயற்கை கடந்த செயல்கள், அற்புதங்கள் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகள் காப்பியங்களில் கையாளப்படுகின்றன.தமிழ்க்காப்பியங்களைப் பொறுத்தவரை இயற்கை கடந்த செயல்கள் காப்பியத்தின் இன்றியமையாக் கூறுகள் என மா.ரா.போ.குருசாமியின் கூற்றும், மதக்காப்பியங்களில் இந்த செயல்கள் இறைவனின் மூலமும், அவருடைய இறைத்தூதுவர்கள் மூலமும் நடைபெறும் என தா.வே. வீராசாமியின் கூற்றும் இங்கே நினைவுகூறத்தக்கது.இயற்கை கடந்த செயல்களும், அற்புதங்களும் சீறாப்புராணத்தில் ஓர் அங்கமாக இருந்து காப்பிய ஓட்டத்திற்கு மேலும் அழகு சேர்க்கின்றன.

எந்த ஒரு இலக்கியமும் மனிதனையும் அவனைச் சார்ந்த சூழ்நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டே அமையும். இஸ்லாமிய இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கானவையல்ல. இறைவன் தந்த இஸ்லாத்தினைத் தமிழுலகம் தெரிந்து கொள்ள இஸ்லாமியக் காப்பியங்கள் தமிழில் தோன்றின. சீறாப்புராணத்தை உமறுப்புலவர் காப்பிய இலக்கணங்கள் செறியத் தமிழ் மரபுகள் தழுவிப் பாடியமையால், தமிழ்ப்புலவர்கள் வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார். முகம்மது நபிகள் அவர்கள் தோன்றி பதினொறு நூற்றாண்டுகள் கழிந்த பின் உமறுப்புலவர், முகம்மது நபிகளின் வரலாற்றைத் தமிழில் பாடியுள்ளார்.

சீறாப்புராணத்தில் 3 காண்டங்களும், 92 படலங்களும், 5027 செந்தமிழ்ப்பாக்களும் உள்ளன.சிந்தைக்கினிய சீறாப்புராணத்தில் விலங்குகள் இறையுணர்வுடன் இருந்தமையை எடுத்துக்காட்டுவதையே நோக்கமாகக் கொண்டு, அதனை வெளிக்கொணரும் முயற்சியாக இப்பதிவு அமைகிறது.

## விலங்குகள் பேசிய படலங்கள்

சீறாப்புராணத்தில் முதல் காண்டமான விலாதத்துக் காண்டத்தில் - புலி வசனித்த படலம்,மற்றும் பாந்தள் வசனித்த படலமும், இரண்டாவது காண்டமான நுபுவத்துக் காண்டத்தில் - உடும்பு பேசிய படலம், மற்றும் மானுக்குப் பிணை நின்ற படலமும், மூன்றாவது காண்டமான ஹிஜ்ரத்துக் காண்டத்தில் - விடமீட்ட படலம், உகுபான் படலம், ஓநாய் பேசிய படலம், மற்றும் ஒட்டகை பேசிய படலம்

என மூன்று காண்டங்களிலும் எட்டுப்படலங்களில் அச்சம் தரும் விலங்குகளும் மான், ஒட்டகம் போன்ற விலங்குகளும் இறைவுணர்வில் சிறந்து விளங்கியமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## புலி வசனித்த படலம்

விலாதத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள இப்படலத்தில், புலி ஒன்றுசாம் நாட்டிற்குச் செல்லும் பாதையில் இருந்து கொண்டு அவ்வழியில் வரும் வழிப்போக்கர்களுக்கெல்லாம் துன்பமிழைத்துக் கொண்டும், வருவோர் போவோர் கால்நடைகள் என அனைத்தையும் கொன்று புசித்துக் கொண்டு இருப்பதாகவும், மக்கள் முகம்மது நபியிடம் கூற, அது கேட்ட முகம்மது நபி அவர்கள் அப்புலியை ஒழிக்க வேண்டுமென அப்புலி இருக்குமிடத்திற்குச் செல்ல, பொன் போல் ஒளி வீசித் திகழும் முகம்மது நபிகளின் முகத்தைப் பார்த்த உடனேயே கொல்லும் தன்மையுடைய அக்கொடிய புலி தன் இயல்பை மறந்தது.

வந்து தெண்டனிட்டு எழுந்து வாய்புதைத்து உற வணங்கி
புந்தி கூர்தரப் போற்றிய வள் உகிர் புலியை
மந்தர ஆசல முகம்மது நனி மன மகிழ்ந்து
சந்தமென் மணிக் கரத்தினால் சிரம் முகம் தடவி
இன்று தொட்டு இவண் நெறியினில் உயிர் செகுத்திடுவது
அன்று வேறு ஒரு காட்டினில் புகுக என்று அறைந்த
மன்றல் துன்றிய முகம்மதின் மலர்அடி வணங்கி
நன்று நன்று என போற்றியே நடந்தது வேங்கை- (765 &766)

என்ற இப்பாடல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.இதில் இஸ்லாமியர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது எங்ஙனம் முறைப்படி 'சலாம்'சொல்வார்களோ, அது போல் வாய்மூடி நிலம்பட வணங்கியப் புலி 'சலாம்' உரைத்தது. முகம்மது நபியின் கரங்களால் தலையும், முகமும் தடவப்பெற்ற புலியை நோக்கி, நீ இன்று முதல் உயிர்வதம் செய்வதைத் தவிர்த்து, வழிப்போக்கர்களுக்குத் துன்பமிழைக்கும் எண்ணத்தை விட்டுவிட்டு, வேறொரு கானம் செல்லுமாறு அவர் கட்டளையிட, அவரை வணங்கிப் பணிந்து, நல்லது நல்லது என புகழ்ந்தவாரே அவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்றது குறிப்பிடத்தக்கது.

## பாந்தள் வசனித்த படலம்

புலியைப் போன்றே மலைப்பாம்பு ஒன்றும்சாம் நாட்டுப் பயணத்தின்போது அவ்வழியில் இருந்து கொண்டு அவ்வழியில் வருவோர், போவோருக்குத் துன்பம் செய்து கொண்டிருப்பதை அறிந்த முகம்மது நபி அதனைக் கொன்று ஒழித்துவிடும் எண்ணத்துடன் சென்றபோது,

முகம்மதே உமது அடி இணை காண வழியில்
….. …. …. …. ….. …. …. ….
வருந்து துன்பம் இன்று ஒழிந்தனம் என மகிழ்ந்ததுவே
மலை கிடந்து உயர்ந்ததை என விரிந்த வாய் பிளந்து
தலை எடுத்து நா இரண்டினால் ஒரு சலாம் சாற்றி
நிலை அசைந்து ஒளி நெட்டு உடல் குழைந்திட நெளிந்து
பல பொறி படம் தரை பட பணிந்து பின் பகரும்- (775 - 777)

என்ற பாடல் மூலம், அப்பாம்பு அதிசயிக்கத்தக்க வகையில் வாய் திறந்து ‘சலாம்’கூறி, இறைவனின் இறுதித் தூதுவரை, அதுவரைத் தரிசிக்க வேண்டிக் காத்திருப்பதாகச் சொல்ல, அப்பாம்பு பண்ணிய பாவங்கள் எல்லாம் பருதி முன் இருள் போல் மறைய, இறையருளால் கொல்லப்படாமல் காக்கப்பட்டு மனிதர்களற்ற வேறிடம் செல்லத் துணிகின்றது. இதன் மூலம் முகம்மது நபி அவர்களை தரிசித்ததன் மூலம், தன் கொடிய குணத்தையும் மறைந்து, இறையுணர்வின் மூலம், விலங்கும் புனிதமடைந்தது என தெரியவருகின்றது.

## உடும்பு பேசிய படலம்

சீறாப்புராணத்தில் இரண்டாவது காண்டமான நுபுவத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள இப்படலத்தில், வழி கேடர்களால் உண்டான தொல்லைகள் குறைந்து மக்கமா நகருக்கு அருகிலுள்ள கானகத்தில் தன் தோழர்களுடன் முகம்மது நபி தங்கி இருக்கின்ற நேரத்தில் அரபிக்குல வேடன் ஒருவன் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து தனக்குரிய வேட்டை சிக்காமல் இறுதியில் ஒரு வளைக்குள் புகும் உடும்பைப் பிடித்துக் கொண்டு வீட்டிக்குத் திரும்பும்பொழுது முகம்மது நபிகளைக் கண்டு, அவரைப்பற்றிய செய்திகளைத் தெரிந்து கொண்டு தாங்கள் இறைத்தூதர் என்று நிரூபிக்க வேண்டுமெனக் கேட்டு, இறுதியில் தான் கொண்டு வந்த உடும்பைப் பேச வைத்தால் இறைத்தூதராக ஒத்துக் கொள்வதாகக் கூறுகின்றான். அதன்படி முகம்மது நபியும் வளையிலிருந்து உடும்பை வெளியே விடச்சொல்லி அதை அன்புடன் பார்க்கின்றார்.உடனே உடும்பு பேசுகின்றது.

தீது இகல் அற்றவன் சினந்து செய்யும் அ
வேதனை நரகம் என்று எரியும் வீட்டினில்
பேதம் இல் அன்னது ஓர் பெரியவன் - தனை
ஓதியான் வணங்குவது உண்மை என்றதே !- (1627)

என்ற பாடலின் வழியாக, தான் வணங்கும் இறைவன் அல்லாஹ் என்றதுடன், இஸ்லாம் மார்க்கமே சிறந்த மார்க்கம் என்றும், அம்மார்க்கத்தில்

உள்ளவர்களுக்குத் துன்பமில்லை என்றும், இனிய கலிமாவை முன்மொழிந்து, தான் வாழ்ந்த கானகத்திற்கே திரும்பச் செல்ல, இந்த அதிசயத்தைப் பார்த்த வேடன் தன் குடும்பத்துடன் இஸ்லாத்தைப் பின்பற்ற உறுதிகொண்டான் என்றும், உடும்பு தன் துன்பம் நீங்கி, தன்னுடைய வாழிடம் சேர்ந்தது போல வேடனும் அறியாமை என்னும் இருள் நீங்கினான் என்றும் கூறப்படுகிறது.

## மானுக்குப் பிணை நின்ற படலம்

முகம்மது நபி அவர்கள் வேடனிடம் சிக்கிய ஒரு பெண் மானிற்காகத் தாமே பிணையாக நின்று, அம்மானை அவனிடமிருந்து மீட்ட பெருங்கருணைத் திறத்தை உணர்த்துகின்றது இப்படலம்.

வேடனிடம் அகப்பட்ட தாய்மான் ஒன்று, தன் கன்றுக்குப் பாலூட்டி வரும் வரை தனக்கு இரக்கம் காட்ட வேண்டுமென வேடனைக் கெஞ்சுகிறது.ஆனால் வேடன் மறுக்கின்றான்.அந்த நேரத்தில் அவ்வழியே வந்த முகம்மது நபி அவர்களைப் பார்த்துத் தனக்காக வேடனிடம் பிணையாக இருக்க அனுமதி கேட்க வேண்டுகிறது.

மன்னிய கலிமா என்னும் வழி நிலை மாந்தர் யாரும்
பொன் நிலம் புகுதச்செய்யும் புண்ணிய புகழின் மிக்கோய்
கொல் நிலை சிலை கை வேடன் கொடும் பசி தணிப்பேன் என் தாள்
பின்னிய பிணிப்பு நீக்கி பிணை என விடுத்தல் வேண்டும் - (2090)

என்றது. தாயுள்ளத்தின் சிறப்பையும் அதன் குட்டியின் பெருமையையும் ஊகித்து அறிந்த முகம்மது நபி, இச்சிறப்பு உலகிற்கும் தெரிய வேண்டுமென மான் திரும்பி வரும் வரையில் தான் பிணைக் கைதியாக இருப்பதாக ஒப்புக் கொண்டு வேடனிடம், மானை விடுவிக்க வேண்டுகிறார். அதற்கேற்ப வேடனும் அனுப்ப, அங்கிருந்து விரைந்த மான் தன் கூட்டத்தைச் சேர்ந்து, தன் நிலையை விளக்கிவிட்டுத் தன் குட்டிகளுக்குப் பாலூட்டிக் கூறவேண்டிய அறிவுரைகளைக் கூறிவிட்டு மீண்டும் வேடனிடம் வர புறப்பட்டப்பொழுது அதன் குட்டி ஒன்று தாய்க்குப் பதிலாகத் தான் செல்வதாகக் கூற, தாய் மான் மறுத்தும் கேட்காமல் குட்டி முன்னே செல்ல, ஒன்றுக்கு இரண்டாகத் திரும்பி மான்கள் வரும் அதிசயத்தைப் பார்த்து முகம்மது நபியும், வேடனும் வியக்க, அப்பொழுது இஸ்லாமிய மதத்தின் சிறப்பை வேடனுக்குச் சொல்லி, அம்மானுக்கும் குட்டிக்கும் முகம்மது நபி விடுதலை பெற்றுத்தர அவையிரண்டும் இஸ்லாமிய முறைப்படி முகம்மது நபியை வணங்கிவிட்டுத் தங்கள் இருப்பிடம் சேர, வேடனும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினான்.

இந்த நிகழ்வானது, மணிமேகலை காப்பியத்தில் சாதுவன் நாகர்களுக்கு உபதேசித்தது போன்ற அற உரையாக அமைந்திருப்பதும், புலால் உண்பவரும் பிற உயிர்களிடத்து தங்களுக்கு ஏற்ற வழியில் இரக்கம் காட்ட வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. மேலும், தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவிற்காகத் தன்னையே துலாக்கோலில் நிறுத்திய சிபிச் சக்கரவர்த்தியைப் போல, மானுக்காக முகம்மது நபி அவர்களே பிணையாக இருந்ததும் இங்கு போற்றத்தக்கதாகும்.

## விட மீட்ட படலம்

சீறாப்புராணத்தில் மூன்றாவது காண்டமான ஹிஜ்ரத்துக் காண்டத்தில் இடம்பெற்றுள்ள இப்படலத்தில், இறை மறுப்பாளர்களின் தொல்லைகளுக்குத் தப்பித்து அவர்கள் அறியா வண்ணம் தௌர்மலையில் தங்கியிருந்தபோது பாம்பு ஒன்று முகம்மது நபி அவர்களைத் தரிசிக்க வேண்டுமென வருகின்றது. இதை அறியாத அபுபக்கர் அவர்கள் முகம்மது நபிகள் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவருக்கு எந்தத் தீங்கும் வரக்கூடாது என அப்பாம்பு வர இருந்த வழிகளை எல்லாம் தன்னுடைய உயர்ந்த மேலாடையைக் கிழித்து அடைத்து விட, இருந்த ஒரு வழியிலும் தன் பாதம் கொண்டு மறைத்த காரணத்தினால் கோபம் கொண்ட அப்பாம்பானது வேறு வழியில்லாமல் அபுபக்கரைத் தன்னுடைய நான்கு விதமான விசங்களும் பரவக்கூடிய வகையில் கடிக்கின்றது.

இப்படிப்பட்ட சூழலில் முகம்மது நபி அவர்கள் விழித்தெழுந்து என்ன நடந்தது என வினவ, அப்பாம்பு தான் யார்?எதற்காகக் காத்து கொண்டிருந்தது என்பதையும் கூறுகின்றது. இறைத்தூதர் வந்திருக்கிறார் என்பதை அம்மலையில் கஸ்தூரியின் மணம் வற்றாதப் புதுமணத்துடன் மூன்று நாட்களுக்கு முன்பிருந்து மணந்ததையும், தேவர்கள் அம்மலை முழுவதும் சூழ்ந்து கொண்டு சலாம் உரைத்ததையும், உணர்ந்து கொண்டு தன் நாயகரைக் காண வரும்பொழுது அபுபக்கர் தடுத்தார் அதனால் கடித்தேன் எனத் தான் கடித்ததற்காண காரணத்தை எடுத்துரைக்கின்றது.

> நெடிய காலம் உற்று ஒரு பலன் நினைத்தவருக்கு அடுத்து
> முடியும் போழ்தினிறல் தடுப்பவர் எவரையும் முரணித்
> தடிதல் நன்று எனும் அறிவினால் தடிந்ததேயன்றிப்
> படியின் நேர் தவறிலன் என உரைத்தது பாந்தள் ! - (2619)

இவ்வாறு தான் செய்தது தவறு இல்லையென எடுத்துரைத்து, முறைப்படி 'சலாம்'உரைத்து, இனிய கலிமாவை முன்மொழிந்து முகம்மது நபிகளிடம் நல்லாசி பெற்று மறைந்தது.இதன் மூலம் விலங்கினங்களும் கூட இறையுணர்வை உணர்ந்து தவநெறியில் வாழ்ந்த சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

## உகுபான் படலம்

மதீனா நகரத்து இடையர்களில் ஒருவனான உகுபான் என்பவர் ஒருநாள் ஆடுகளை ஓட்டிக்கொண்டு மலைச்சாரலில் இருக்கும்போது, புலி ஒன்று வந்து ஆடுகளைப் பிடித்து உண்ண நினைத்து அங்கு வருகின்றது. புதர் மறைவில் பதுங்கி நின்று, ஆட்டையும் பிடித்து விடுகின்றது.ஆனால் உகுபான் புலியிடம் சிக்கிய ஆட்டைப் பல்வேறு வகையிலும் முயன்று மீட்டு விடுகின்றான்.ஆட்டை இழந்த புலி, ஒரு குன்றின் மேல் ஏறி நின்று கொண்டு உகுபானைப் பார்த்து, நீ செய்தது நியாயமா?எனக்கான உணவைப் பறித்து விட்டாயே எனப் பேச, உகுபான் தன் இன மக்களைக் கூவி அழைத்து, இந்த அதிசயத்தைக் காட்ட, தான் பேசியது வியப்பில்லை. இதைவிட ஆச்சரியம் ஒன்று உள்ளது என,

மக்கமா நகர் விட்டு அணிமனை மதீனா
நகரினில் முகம்மது நயினார்
புக்கினர், அவர்சொல் உண்மை என்று ஈமான் கொண்டு,
உளம் பொருந்தித் தீன் நிலையைக்
கைக்கொள்ளாது இருத்தல் புதுமையே அன்றிக்
கானிடை விலங்கு இனம் மொழிவது
இக்கணம் புதுமை என எடுத்து இசைத்தல்
ஏழ்மை என உடைத்து அகன்ற - (2888)

என்ற இப்பாடலின் வாயிலாக, முகம்மது நபியின் வார்த்தைகளைச் சத்தியமென்றும், மனம் உடன்பட்டு, ஈமான் கொண்டு இஸ்லாம் மார்க்கத்தின் மீது நிலையில்லாமல் இருப்பது ஆச்சரியம் என்றும், மனிதனுக்கு இறையச்சத்தைப் புலி அறிவுறுத்த, அதனைக் கேட்ட உகுபான் மனம் திருந்தி இஸ்லாம் மதத்தை தழுவினான். இச்செய்தியானது, மதீனா நகர் முழுதும் பரவியது.இதன் மூலம் விலங்கின் இறைவுணர்வை கண்ட மனிதனும், இறையச்சத்தோடு நேர்வழி வந்தடைந்ததைக் காணமுடிகிறது.

## ஓநாய் பேசிய படலம்

மக்கா நகரினை ஒட்டிய ஒரு மலையில், ஒரு நாள் மான் கூட்டத்தைக் கண்ட ஓநாய் ஒன்று மான் வேட்டையாட நினைத்து மான் கூட்டத்தின் மேல் பாய்கின்றது.இதனால் சிதறிய மான் கூட்டத்திலிருந்து ஒரு பெண்மான் தனித்து ஓட, அதைத் துரத்திக் கொண்டு ஓநாய் வருகின்றது.ஓநாயிடம் அகப்படாமல் ஓடிய அப்பெண் மான் மக்கா நகருக்குள் அமைந்துள்ள காபாவை அடைகின்றது.காபாவின் எல்லைக்குள் இரத்தம் சிந்தக்கூடாது என்பது அரேபியர்களின் கொள்கை.இதனை அறிந்திருந்த ஓநாய், காபாவின் எல்லையை ஒட்டிய வேறொரு இடத்தில் நின்று கொண்டிருந்தது.

அங்கே இருந்த அபூஜஹலும் அவரது தோழர்களும் இதனைப் பார்த்து இந்த அதிசயம் வியப்பானது என வியந்து பாராட்ட, ஓநாய் இதுவல்ல அதிசயம் என பேசத் தொடங்குகிறது. ஓநாய் பேசுவது அதிசயம் இல்லையா என கேட்க, அதற்கு உகுபான் படலத்தில் புலி சொன்னதைப்போல,

ஆதி-தன் ஒளிவினில் தரித்து அனாதி-தன்
தூது என உலகினில் தோன்றி நின்றனர்
வேதமும் இறங்கின மெய்மை வேதத்தின்
நீதமும் நடத்தினர் நிகரும் இல்லையால் !
அ நபி நல் மறை அறைந்து ஈமான் கொள
சொன்னவை அனைத்தையும் மறுத்து சூழ்தர
இன்னலை பொருந்தினிர் ஈது அலால் இனி
பன்ன அரும் புதுமை ஒன்று இல்லை பாரினே - (2980 &2981)

என்று இறைவனையும், இறைத்தூதுவரையும், இறைவேதத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்ததே அதிசயம் எனக் கூறிச் சென்றது ஓநாய்.கோவிலைப் போல காபாவின் எல்லையும் புனிதமானது என்பதும், இறை மறுப்பாளர்களுக்கு விலங்கினங்களின் மூலம் இறையச்ச உணர்வை ஏற்படுத்தி இருப்பதும் இங்கு வியக்கத்தக்கது.

## ஒட்டகை பேசிய படலம்

ஒட்டகம் ஒன்று மதம் பிடித்து, கால் கட்டை அறுத்துக்கொண்டு ஈச்சத்தோப்பில் நுழைந்து மரம், செடி, கொடிகளை அழித்துச் சிதைத்தது.பிடிக்க வந்தவர்களை அது தன் பெரிய வாயைத் திறந்து, சினத்தோடும் கடிக்க வந்தது.அவர்கள் அஞ்சி ஓடி முகம்மது நபி அவர்களிடம் செய்தியைக் கூறினர்.வந்து பார்த்தபோது தோட்டம் அலங்கோலமாக அழிந்து கிடந்தது. பறவைகள் அச்சத்தினால் பறந்து ஒன்று சேர்ந்து எழுப்பிய ஓசையானது, முகம்மது நபி அவர்களே, எங்கள் தாயகமாய் விளங்கும் இச்சோலைக்கு வந்த துன்பத்தைத் தீர்க்க வேண்டும் எனப் புலம்பி முறையிடுவது போன்றிருந்தது. மலர்களில் மொய்த்திருந்த வண்டுகளும் சிதறி ஓடின. செடி, கொடிகளும் கண்ணீர் விட்டு அழுவது போல நீர்த்துளிகளைக் கொட்டிக் கொண்டிருந்தன.

முகம்மது நபி அவர்கள் ஒட்டகையை அழைத்து ஏன் என்பது போல பார்க்க, முன்னங்கால்களை மடக்கி கண்ணீர் சொரிய அழுது, நீண்ட கழுத்தைத் தாழ்த்தி வணங்கி நின்றது. ஏன் இவ்வாறு செய்தாய் எனக் கேட்க,

அய்யனே அடியேன் - தன்னை கொண்ட ஆண்டவனுக்கு அன்பாய்
செய்யும் ஊழியங்கள் ஓவாது ஆண்டு நாற்பதும் செய்து எய்த்து
மெய் எலாம் மெலிந்து காலில் விரைவு அற்று நெஞ்சு போக

கையறல் அடைந்து வீழும் காலமாய் தளர்ச்சியுற்றேன்
அவர் அது குறித்திடாமல் அடித்தடித்து அன்னை மேனாள்
எவன காலத்து தாங்கும் பாரமே ஏற்றி தின்ன
கவர் மரத்து இலையும் புல்லும் கால் வயிறு அளித்து தண்ணீர்
தவனமும் தீர்ந்திடாமல் தறுகண்மை செய்யலுற்றார்(4733 &4734)

அதற்கு ஒட்டகம் இறைத்தூதரே என்னை விலைக்கு வாங்கியவருக்கு நாற்பதாண்டுகள் ஓயாது ஊழியம் செய்தேன்.அவர்களின் பொதிகைகளைச் சுமந்து சுமந்து உடல் மெலிந்து ஒடுங்கி விட்டேன்.சரியான தீனி கூடக் கொடுப்பதில்லை.இத்துணைக்கும் மேலான என்னைக் கொன்று தின்னவும் எண்ணம் கொண்டுள்ளனர்.இதனை அறிந்தே இவ்வாறு வெறி கொண்டு அழித்தேன் என்றது.

இதனைக் கேட்ட முகம்மது நபி அவர்கள் ஒட்டக உரிமையாளரை அழைத்து இதன் முடிவு காலம் வரை இதற்கு முறையான உணவு அளித்துப் பாதுக்காக்க வேண்டுமெனப் பணித்தார்.அவரும் சம்மதித்து ஒட்டகத்தை அழைத்துச் சென்றார்.இதன் மூலம் எளிய விலங்குகளுக்கும் அன்பு, கருணை, இரக்கம் காட்ட வேண்டும் என்ற கருத்துக்கள் பெறப்படுகிறன.

இவ்வாறாக, சீறாப்புராணத்தின் இப்பாடல்களில் எல்லாம் கொடிய விலங்குகளும் இறையுணர்வுடன் இருந்தன என்பதும், அவை இறைத்தூதரைப் பார்த்தவுடன் தங்கள் கொடிய குணத்தை மறந்தன என்பதும், மக்களுக்கு அவை நன்னெறியை உணர்த்திய செய்தியும் குறிப்பிடத்தகுந்தது. இங்ஙனம் விலங்குகளே இறையுணர்வை அறிந்து நடக்கையில், மனிதராகப் பிறந்த நாம் எச்சமயம் சார்ந்தவராக இருப்பினும் பலமடங்கு இறையுணர்வுடனும், மனித நேயத்துடனும் வாழ வேண்டும் என்ற உயரியப் பண்புகள் சுட்டிக்கட்டப்படுவதை அறியமுடிகிறது.